பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 01 | வியாழக்கிழமை | 15.05.2025 | அதிர்வு 284

## மனோ, சுமந்திரன் ஹரிக்கு வாழ்த்து!



கனடாவின் பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக் கைகள் அமைச்ச ராகப் பொறுப்பேற் றுள்ள 06



## நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில்

# ஜே.வி.பிக்கு மக்கள் தந்த ஆணையைப் பிடுங்கினால் கடுமையான நடவடிக்கை!





### ஜனாதிபதி அநுரகுமார கடுந்தொனியில் எச்சரிக்கை

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழுங்கப்பட்ட பொது ஆணையை அபகரிக்க முயற்சித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சிகளுக்குக் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் தாங்கள் நாடாளுமன் றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள் ளார்கள் என்பதையும் இந்த எச் சரிக்கைக்கு இடையில் அவர் நினை வூட்டினார். 06

# டிரான் அலஸ், தென்னக்கோன் என்னிடம் 30 கோடி ரூபா கேட்டனர்

### பாதாள உலகக் குழு உறுப்பினர் "ஹரக் கட்டா" வெளியிட்ட புதிய தகவலால் பரபரப்பு

"முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் ஆகியோர் கோரிய 30 கோடி ரூபாவைக் கொடுக்க மறுத்தமையால்தான் நான் தங்காலை சிறைச்சாலையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளேன்." –

– இவ்வாறு பாதாள உலகக் கும்ப லைச் சேர்ந்த "ஹரக் கட்டா" என்ற ழைக்கபடும் நதுன் சித்தக விக்ரமரத்ன தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை வழக்கு விசா ரணைக்குப் பின்னர் கொழும்பு நீதி மன்ற வளாகத்திலிருந்து பொலிஸா ரினால் அழைத்துச் 06







இராமேஸ்வரத்துக்கும் மன்னருக்கும் இடை யில் ராமர் பாலத்தில் எஞ்சி இருக்கும் 11 மணல் திட்டுக்களில் ஆறு திட்டுகள் இலங்கையின் கடல் எல்லைக்குள் இருக்கின்றன. எஞ்சிய ஐந்து திட்டுக்களும் இந்தியாவின் கடல் எல்லைக்குள் உள்ளன.

தலைமன்னாரிலிருந்து இலங்கையின் கடல் எல்லைக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆறாவது மணல் திட்டு வரை சுற்றுலா பயணிகளை ஏற் றிச் சென்று அந்த மணல் திட்டுகளில் இறக்கி உல்லாசப் பயணம் நடத்தும் திட்டத்தை அண் மையில் இலங்கைத் தரப்பு ஆரவாரமாக அறி வித்தது.

அந்த அறிவிப்பின்படி அந்த உல்லாசப் படகு சேவை இன்றைய தினம் – மே 15ஆம் திகதி – ஆரம் பமாக வேண்டும். ஆனால் அது இப்போதைக்கு ஆரம்பமாகும் என்று கூறுவதற்கு இல்லை.

தலைமன்னாரில் இருந்து 6 ஆவது தீடை வரை விரைவில் சுற்றுலாப் படகு சேவை இடம்பெறும் என ஏப்பிரல் மாதம் 16 ஆம் திகதி 06




# இறம்பொடையில் மீண்டும் விபத்து! 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி!!

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டம், கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை பகுதியில் பஸ் விபத்து இடம்பெற்ற இடத்தில் நேற்று வான் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 12 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலிருந்து அனுராதபுரம் – இராஜாங்கனை நோக்கிப் பயணித்த வான் ஒன்று, கொத்மலை – இறம்பொடை பகுதியில் அண்மையில் பஸ் விபத்துக்குள்ளான இடத்துக்கு அருகிலுள்ள புளும்பீல்ட் தோட்டப் பகுதியில் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 12 பேர் காயமடைந்து கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாப் பகுதிக்குச் சுற்றுலா சென்றுவிட்டு மீண்டும் திரும்பிச் செல்லும் வழியிலேயே குறித்த வான், வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்தவர்களின் நிலை மிகவும் மோசமாக இல்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் குறித்த வான் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.









# கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்ற ஹரிக்கு இளங்குமரன் எம்.பி. வாழ்த்து!

கனடாவின் பிரதமர் மார்க் கார்னியின் அமைச்சரவையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற ஹறி ஆனந்தசங்கரிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

“உலகலாவிய ரீதியாக தமிழர்கள் பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்காரர்களாக தமது தடத்தினை ஆழமாகப் பதித்துள்ளனர்.

அரசியல், வைத்தியத்துறை, விளையாட்டுத்துறை, விஞ்ஞானம் மற்றும் சினிமாத்துறை எனத் தமிழர்கள் கால்த்தடம் பதிக்காத துறைகள் இல்லை.

அந்தவகையில் தான் எமது நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் எம்மில் ஒருவர் கனேடிய மக்களாலும் – அரசாங்கத்தாலும் மதிக்கப்பட்டு இன்று மிக முக்கியமான பொறுப்பான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இன, மத, நிற பேதங்களைக் கடந்து ஒரு தமிழரை அந்த நாட்டு குடியுரிமை பெற்ற மக்கள் ஏற்றுக்கொள்வதென்பதும் – அதற்கு மேலாக அந்த நாட்டின் அரசு அவருக்கு மிகப் பெரிய பதவியை வழங்குவதென்பதும் அவருடைய திறமைக்கும் – நேர்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இது மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையும் கூட.

கனேடிய அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரியைக் கடந்த காலங்களில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன்.

சட்ட வல்லுநரும் – மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அவருக்கு மிகப் பொருத்தமான பதவியை அந்த நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதனூடாக அந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய பாதுகாப்பு மற்றும் உரிமைகள் நிலைநாட்டப்படுவதுடன் – விசேடமாகக் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களுக்குப் புத்துணர்வினைக் கொடுப்பதாக இந்தப் பதவிப்பிரமாணம் அமைந்துள்ளது.” – என்றுள்ளது.



# வெசாக் நிகழ்வைப் பார்வையிடச் சென்ற காதல் ஜோடி விபத்தில் சிக்கி பரிதாபப் பலி

வெசாக் நிகழ்வைப் பார்வையிடுவதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற காதலர்கள், தனியார் பஸ்ஸில் மோதி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அலஸ்வத்தை, கிரிமதிமுல்ல, தெலிஜ்ஜவிலவைச் சேர்ந்த விக்கிரமசிங்க கமச்சிகே மிலன் சமீர (வயது 30) என்ற இளைஞரும், பொல்ஹேனெ, காசிவத்தபுரத்தைச் சேர்ந்த எதிரிசிங்க எமெல்ஷி ஹவிஸ்கா டயஸ் (வயது 23) என்ற யுவதியும் மாத்தறையில் இடம்பெற்ற சம்பவத்தில் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர் தெலிஜ்ஜவில சதொச கிளையில் காசாளராகவும், உயிரிழந்த இளம் பெண் மாத்தறை நகரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் எழுத்தராகவும் பணியாற்றியதாகக் கூறப்படுகின்றது.

மாத்தறையிலிருந்து தெவிநுவர நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவர்கள், மாத்தறையிலிருந்து திஸ்ஸமஹாராம நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் பின்புற சக்கரங்களுக்கு அடியில் சிக்கி நசுங்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# 266 உள்ளூராட்சி சபைகளில் நாங்களே ஆட்சியமைப்போம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டம்



“பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். 266 உள்ளூராட்சி சபைகளில் நாங்களே ஆட்சியமைப்போம். அதற்கான உரிமை எமக்குக் காணப்படுகின்றது.”

- இவ்வாறு சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

”பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். 266 உள்ளூராட்சி மன்றங்கள் என்பது பெரும்பான்மையையே குறிக்கின்றது. இவற்றில் 150 க்கும் அதிகமான சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், நகர பிதாக்கள், உப நகர பிதாக்கள், மாநகர மேயர்கள், உப மாநகர மேயர்கள் உள்ளிட்டோரை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் நாம் பெயரிடுவோம். அதற்கான உரிமை எமக்கே காணப்படுகின்றது.

குறித்த சபைகளில் 50 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்படும் 14 சபைகளில் ஒன்றுக்கான பதவிகளுக்கான பெயர்களைக் கூட அவர்களால் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க முடியாது.

காரணம் அவற்றில் ஒரு சபையில் கூட ஐக்கிய மக்கள் சக்திக்கு 50 சதவீதம் இல்லை. அத்தோடு இவற்றில் 4 சபைகளில் நாமும் ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுக்கொண்ட ஆசனங்கள் சமமாகும்.

எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் சபைகளில் அவர்கள் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துக் காண்பிக்கவேண்டும். ஆனால், ஒவ்வொரு கட்சிகளிலும், சுயாதீன குழுக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களால் அவ்வாறு செயற்பட முடியும் என்று நாம் நம்பவில்லை.

எமக்கு வாக்குகள் குறைவடைந்திருக்கின்றதெனில், எதிர்க்கட்சிக்கு அதிகரித்திருக்க வேண்டுமல்லவா? எனவே, அரசுக்கு வாக்குகள் குறைந்திருப்பதாக எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் பிரசாரங்கள் அடிப்படையற்றவை.” - என்றார்.

# உள்ளூராட்சி சபைகளின் பிரதான பதவிகளுக்கான பெயர் விவரங்களை ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குக!

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து




உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் பிரதான பதவிகளுக்கு பரிந்துரைக்கப்படுபவர்களின் பெயர் விவரங்களை ஒருவார காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான தேர்தல் கடந்த வாரம் நடைபெற்று, தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 339 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் பதவிக்காலம் 2025.06.02 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளில் பெரும்பான்மையைப் பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அந்த அதிகார சபைகளின் மேயர், துணை மேயர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பெயர் விவ ரங்களை ஒருவார காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் கன்னிக் கூட்டம் எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதிக்குக் கூடுவதற்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை கோட்டா மட்டத்தில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை இல்லாதவிடத்து, எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி சபை கூடும்போது வாக்கெடுப்பு நடைபெறும்.

(மற்றொரு செய்தி 19ஆம் பக்கத்தில்...)

# ஒரு லட்சத்து இருபதாயிரம் தொன் உப்பு உற்பத்தி செய்த ஆனையிறவில் தற்போது 18 ஆயிரம் தொன்னே உற்பத்தி!




**(ந.லோகதயாளன்)**

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவில் வாழும் மக்கள் உப்பு வாங்குவதற்கு அலையும் நிலை ஏன் ஏற்படுகின்றது?

65,610 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்ட நாட்டில் 23,400 சதுரக் கிலோ மீற்றர் கடல் சொந்தமாக உள்ளது. இது 1,700 கிலோ மீற்றர் நீளக் கடற்கரையை உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறுள்ள இலங்கையில் இன்று 50 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம் கொண்ட உப்பளங்கள் முப்பது உள்ள போதிலும் அவற்றில் அரசிற்கு சொந்தமான உப்பளங்கள் ஆக மூன்று மட்டுமே.

இதில் ஆனையிறவு அரச உப்பளத்திற்கு 3000 ஆயிரம் ஏக்கர் நில வசதி உள்ளபோதும் மிகச் சொற்ப நிலத்திலேயே உப்பு உற்பத்தி இடம் பெறுகின்றது.

1990 ஆம் ஆண்டிற்கு முன்பு ஆண்டிற்கு 120,000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி இடம்பெற்ற ஆனையிறவில் இன்று வெறுமனே 18,000 மெற்றிக் தொன் உப்பு மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு குறிஞ்சாத்தீவில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்படாதமையும் முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது.

இவை தொடர்பில் இலங்கை தேசிய உப்பு உற்பத்தி நிறுவனத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது –

இலங்கை நாட்டிற்கு ஆண்டிற்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு தேவையாகவுள்ளது. ஆனால் 2 லட்சம் மெற்றிக் தொன் உற்பத்தியை மேற்கொண்டு வந்தோம். இருப்பினும் தற்போது இரு ஆண்டுகளாக நாடு முழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை மட்டுமே உற்பத்தி செய்ய முடிகின்றது.

இதனைப் பங்கீட்டு அடிப்படையில் சில்லறை விலை 175 ரூபா அச்சிட்டு, 139 ரூபாவிற்கு விநியோகம் செய்கின்றோம். ஏற்றி, இறக்கல் விநியோகங்களுடன் அவர்கள் 175 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட உற்பத்திக் குறைவிற்கு நிர்வாக குறைபாடுகள் அல்லது தவறு காரணம் கிடையாது. மாறாக தற்போது நிலவும் கால நிலை மாற்றம் மட்டுமே காரணம்.

ஆனையிறவு உப்பளமானது 2016ஆம் ஆண்டு முதல் செயல்படுகின்றது. தற்போது அங்கு அதிகரித்த வலுக்கொண்ட சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் அதிக உப்பு உற்பத்தி மேற்கொண்டாலும் உடன் சந்தைக்கு விட முடியும். இருப்பினும் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் அதிகரித்த மழை காரணமாக எதிர்பார்க்கும் உற்பத்தியை ஈட்டமுடியாத காரணத்தினாலேயே சில தனியார் நினைத்த விலையில் சந்தைப் படுத்துகின்றனர்.

அதிகரித்த விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி தற்போது காணப்படும் நெருக்கடியை தவிர்ப்பதற்காக 50 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது. அது அடுத்த வாரம் சந்தைக்கு வரும் காலத்தில் உள்ளூர் உற்பத்தியும் வரும்போது தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடுகளோ இன்றி 175 ரூபாவிற்கு உப்பை வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு அரச திணைக்களம் அதிக அளவில் சந்தைப்படுத்தப்படுவதாக கூறினாலும், வெளிச் சந்தையில் தனியாரின் உற்பத்தி பகிரங்கமாக 400 ரூபா அச்சடிக்கப்பட்ட பொதியில் விற்பனை செய்யப்படுகின்றமை மக்கள் மத்தியில் அதிக விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


# வவுனியா மாநகர சபையில் சங்கு அணிக்குள் குழப்பம்

## போனஸ் ஆசனம் யாருக்கு என்பதில் இழுபறி

**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் போனஸ் ஆசனம் யாருக்கு என பங்காளிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்த நிலையில், ஒரு போனஸ் ஆசனம் பெண் ஒருவரை நியமிப்பதற்கு கிடைத்திருந்தது. முதலாவது போனஸ் ஆசனம் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவிற்கு என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.



தற்போது மாநகரசபையின் போனஸ் ஆசனத்தை தமக்கு தருமாறு புளொட் கோரியுள்ளது. மாநகரசபையில் வட்டாரம் வென்ற புளொட் 2 உறுப்பினர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ள நிலையில் தற்போதைய போனஸ் ஆசனத்தையும் புளொட் கோரியுள்ளது என ரெலோ தெரிவித்துள்ளது.

அதற்கு ரெலோ மறுப்பு தெரிவித்துள்ளது. எனினும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் புளொட் அமைப்பாக இருப்பதால் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. இதனால் ரெலோ தரப்பு குழப்ப நிலையில் உள்ளதாகவும், விரைவில் கூடிக் கதைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தக் கூட்டணிக்குள் மேயர் தெரிவு மற்றும் போனஸ் ஆசனம் தொடர்பில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னார் மாவட்ட அரச அதிபரும், தேர்தல் பரப்புரைக்காக 17 ஆம் திகதி மன்னார் வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் அறிவித்திருந்தனர்.

இதன் பின்பு மாவட்டத்தில் ஏப்பிரல் 22 ஆம் திகதி சகல தரப்பினரையும் உள்ளடக்கி மாவட்ட அரச அதிபர் தலைமையில் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டு, இவ்விடயங்களைக் கையாள அதில் ஓர் குழு நியமிக்கப்பட்டது.

படகு சேவை மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல் நிபந்தனைகளை கடற்படையினர் அடுத்த 5 தினங்களில் வழங்குவர், அதன் அடிப்படையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மே மாதம் 15 ஆம் திகதி படகு சேவை ஆரம்பிக்கப்படும் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறெல்லாம் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கு முட்டுக்கட்டை இடுவது போன்று 5 தினங்களில் கடற்படையினர் வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்பு இன்று வரையில் வழங்கப்படவில்லை. அதனை வழங்கவும் கடற்படையினருக்கு விருப்பம் இல்லை என்றே தெரிகின்றது.

இந்தச் சுற்றுலாப் படகுச் சேவையை நடத்த இதுவரை மூன்று முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒருவர் படகுகளையே தருவித்து விட்டார் என்பதனாலேயே இதோ படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என மிகப் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டது.

சுற்றுலாப் படகுசேவை தொடர்பில் கடற்படையினர் வழிகாட்டலை வழங்காத காரணத்தினால் கடந்த 11ஆம் திகதி ஓர் அவசர கலந்துரையாடலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இறுதியில் அதுவும் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்தப் படகுச் சேவையும் பிள்ளையார் கல்யாண வரிசையில் சேர்க்க வேண்டிய விவகாரமாகி விட்டதுதான் போலும்...!

\+ \+ \+

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் ஒரு வழக்குத் தொடர்பில் எதிர்வுகள் கூறுவதோ, விமர்சனங்கள் முன் வைப்பதோ பொருத்தமற்றது.

ஆயினும், தமிழர் அரசியலில் ஒரு முக்கிய வழக்கு இது என்பதால் சில விடயங்களை மேலோட்டமாகச் சுட்டிக்காட்டிச் செல்லலாம் என்று நினைக்கிறேன்.

அரச சேவையில் அரசியல் செயற்பாடுகளுக்கான உரித்து இல்லாத உயர் பதவியில் பதவி வகித்த வைத்தியர் அர்ச்சுனா, அந்தப் பதவியை விட்டு உத்தியோக பூர்வமாக விலக அல்லது விலக்கப்பட முன்னர் – அதாவது அந்த பதவியில் சட்டரீதியாக இருக்கின்ற நிலையில் – தேர்தலில் போட்டியிட்டமை தவறு, அதனால் அவரது பதவி வெற்றும் வறிதானதுமாக அறிவிக்கப்பட வேண்டும் என்பது மனுதாரரின் கோரிக்கை.

இந்த வழக்கில் தேர்தல் நடைபெறும் சமயத்தில் வைத்தியர் அர்ச்சுனா அரச சேவையில் இருந்து விடுபடவில்லை என்ற நிலைப்பாட்டையே அரசு தரப்பும் எடுக்க இருக்கின்றது என்று தெரிகிறது. இதனால் வழக்கில் வைத்தியர் அர்ஜுனா தரப்பு பலவீனமான நிலையில் இருப்பதாகவே சட்ட வட்டாரங்கள் கருதுகின்றன.

வைத்தியர் அர்ச்சனா அரச பதவியில் இருந்தபடி தேர்தலில் போட்டியிட்டமை தவறு என்ற நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுக்குமானால் பல நெருக்கடிகள் உருவாகும்.

ஒன்று – வைத்தியர் அர்ச்சனா அந்தப் பதவியை வகிக்க முடியாது என்று நீதிமன்றம் அறிவிக்கலாம்.

இரண்டாவது – அவர் அந்தத் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என்ற நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுத்தால் அந்தத் தேர்தல் பட்டியலில் இருக்க வேண்டிய ஒன்பது உறுப்பினர்களில் எட்டு பேர்தான் தகுதி உள்ள உறுப்பினர்களாக இருப்பர். எட்டு பேரைக் கொண்ட பட்டியலை அந்த மாவட்டத்தில் பொதுத்தேர்தலுக்கான விதிமுறைகளை பூர்த்தி செய்த ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்று கேள்வி எழும். ஒரு பெயர் நீக்கப்படுவதால் உரிய எண்ணிக்கை வேட்பாளர் இல்லை என்ற அடிப்படையில் அந்த வேட்பு மனுப் பட்டியலே ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற நிலைப்பாடு எடுக்கப்படுமானால், அப்பட்டியலில் விருப்பு வாக்கில் அடுத்த நிலையில் தெரிவானவர் எம்.பியாகும் தகுதி உள்ளதா என்று கேள்வி வரும்.

மூன்றாவது – அர்ச்சுனா சுயேச்சை வேட்பாளர். அந்த சுயேச்சைக் குழுவின் தலைவரே அவர்தான். தலைவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என்றால், அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்படுமா, அதில் அடுத்த நிலையில் இருப்பவருக்கு அந்தப் பதவியை வழங்க முடியுமா என்ற கேள்விகள் எழும்.

நான்காவது – அந்தப் பட்டியலே ஏற்றுக் கொள்ள முடியாதது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டால் அந்த அணிக்கு வாக்களித்த மக்களின் ஜனநாயக உரிமை என்னாவது?

– இப்படி இந்த வழக்கில் பல இடியப்பச் சிக்கல்கள் – சட்ட நெருக்கடிகள் – இன்னும் காத்திருக்கின்றன. வழக்கு விசாரணைக்கு வரும்போது விடயங்கள் சுவாரஸ்யமாக இருக்கும் என்பது நிச்சயம்...!

மனுதாரர் தரப்பில் இந்த வழக்கை சட்டத்தரணி குமரகுருபரன் அசோக்பரன் கையாண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டிரான் அலஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்லப்பட்டபோது ஹரக் கட்டா இதனைத் தெரிவித்துள்ளார்.

“என்னிடம் தெரிவிப்பதற்குப் பல விடயங்கள் உள்ளன. நான் அவற்றை வரும்போது வெளிப்படுத்துவேன்.” – என்று அவர் சிறைச்சாலைக்கு மீண்டும் அழைத்துச்செல்லப்படுவதற்கு முன்னர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தான் தங்காலை சிறையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபா செலவு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டில் ஹரக் கட்டா மற்றும் சலிந்து மல்ஷிகா என்ற குடு சலிந்து ஆகியோர் மடகஸ்காரில் இருந்து குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதன் பின்னர் ஹரக் கட்டா பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் காவலில் தங்காலை பழைய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## மனோ, சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹரி ஆனந்தசங்கரிக்கு இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் அண்மையில் நடைபெற்ற மத்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் வெற்றி பெற்ற லிபரல் அரசின் அமைச்சரவை பதவியேற்பு வைபவம் கடந்த செவ்வாய்கிழமை ஒட்டாவா நகரில் நடைபெற்றது.

அதன்படி கனடாவின் புதிய மத்திய அமைச்சரவையில் பொதுப்பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராக இலங்கையைப் பூர்விகமாகக்கொண்ட ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்றுக்கொண்டார்.

அவரைதொலைபேசிஊடாகத்தொடர்பு கொண்டு, “சகோதரரே, வாழ்த்துக்கள். நீங்கள் சிறப்பாகச் செய்தீர்கள். சிறப்பாகச் செய்வீர்கள். தொடர்ந்து செல்லுங்கள். நாம் தொடர்பில் இருப்போம்.” – என வாழ்த்துக் கூறியதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவரது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, பொதுப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஹரி ஆனந்தசங்கரிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அவரது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே.வி.பிக்கு மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, 267 உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்க தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆணையைப் பெற்றுள்ளதாகவும், முதல் நாளில் 152 உள்ளூராட்சி மன்றங்களிலும், மீதமுள்ள 115 உள்ளூராட்சி மன்றங்களில் விரைவிலும் கட்டுப்பாட்டை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளை விமர்சித்த அவர், ஆட்சி செய்வதற்கான ஆணையை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்றும், சில உள்ளூராட்சி சபைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்களை மட்டுமே அக்கட்சிகள் பெற்றுள்ளன எனவும் அவர் கூறினார்.

பொது ஆணையை எதிர்த்து உருவாக்கப்பட்ட எந்தவொரு உள்ளூராட்சி சபையும் மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்காது என்றும் அவர் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத்

07










## ஜே.வி.பிக்கு மக்கள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தாங்கள் கொண்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டு இந்த எச்சரிக்கையை அவர் விடுத்திருக்கின்றமையால், தாங்கள் கூடிய ஆசனங்களைப் பெற்ற சபைகளில் எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தங்களின் நிர்வாகத்தைப் பறித்தால், தங்களிடமிருக்கும் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை பலத்தை வைத்து, தேவையான புதிய சட்டங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் அத்தகைய உள்ளூராட்சி சபை நிர்வாகங்களை மீண்டும் பிடுங்குவோம் என்பதைத்தான் மக்களின் பொது ஆணையை எதிர்த்து உருவாக்கப்பட்ட எந்தவொரு உள்ளூராட்சி சபையும் மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்காது என்று அவர் எச்சரிக்கைத் தொனியில் குறிப்பிட்டார் எனக் கருதப்படுகின்றது.








# நானுஓயாவில் எரிபொருள் பவுசர் கவிழ்ந்தது வீதியில் பெருக்கெடுத்த டீசல், பெற்றோல்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கி பயணித்த எரி பொருள் பவுஸர் ஒன்று ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல சுற்று வீதியில் நேற்று மாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பவுஸரின் உள்ளே 2 தாங்கிகளில் பெற்றோல் மற்றும் டீஸல் இருந்துள்ளன. எரிபொருள் பவுஸர் கவிழ்ந்து விபத் துக்குள்ளானபோது அதிலிருந்து வீதியில் வழிந்தோடிய எரிபொருளை பொதுமக்கள் வாளிகள் மற்றும் போத்தல்க ளில் எடுத்துச் சென்றனர். பின்னர் நானுஓயா பொலிஸார் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மூன்று எரிபொருள் பவுஸர்கள் வரவழைக்கப்பட்டு அதிலே எஞ்சிய பெற்றோல் மற்றும் டீசலை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.








# வீட்டில் இருந்து வெளியே சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு!

கேகாலை – தெரணியகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொல்வத்ததென்ன பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சடல மாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தெரணியகல, உடஹேன்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் கடந்த திங்கட்கிழமை காலை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார். இதனால் இவரது குடும் பத்தினர் இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது பொல்வத்ததென்ன பிரதேசத்தில் வைத்து இவரது சடலம் நேற்று புதன்கிழமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பின்னர் குடும்பத்தினர் உடனடியா கப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி யுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ ார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் அவிசா வளை வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை தெரணியகல பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உப்புக்குத் துப்பில்லை!

சமுத்திரத்தினால் சூழப்பட்ட சிறு தீவு இலங்கை. உப்பு உற்பத்தியில் கூட தன்னிறைவு அடைய முடியாத சிறுமைத்தனத்தில் இலங்கை உள்ளமை கவலைக்குரிய விடயம்.

சுற்றிவரக் கடலும், உப்பு உற்பத்திக்குத் தேவையான குடா கடல் மற்றும் உப்பளப் பிரதேசங்களும் நாட்டில் தாராளமாக இருந்தும் கூட உப்பு உற்பத்தியை ஒழுங்காக மேற்கொள்ள முடியாத ஒரு நாடாக இலங்கை இருப்பது விசனத்துக்குரியது.

இலங்கையில் வீட்டுப் பாவனைக்கும் கைத்தொழில் பாவனைக்கும் தேவைப்படும் உப்பின் அளவு ஏறக்குறைய ஒரு லட்சத்து 95 ஆயிரம் மெட்ரிக் தொன்னாகும். ஆனால் நாட்டில் இப்போது ஒரு லட்சத்து 10 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பே வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது. பற்றாக்குறையான சுமார் 40 வீத உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்த நாடு பல பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் காணப்பட்டாலும், அதனை உரிய முறையில் பயன்படுத்துவதை விடுத்து, ஏனைய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதிலேயே பெரிதும் ஈடுபாடு காட்டி வருகிறது.

இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலைகளால் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் நாட்டில் உப்பு உற்பத்தி குறைந்துள்ளதாக உப்பு உற்பத்தி நிறுவனங்கள் அறிக்கை அளித்துள்ளன. இம்முறை வழமைக்கு மாறாக 40 வீத உப்பு உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

உப்பு உற்பத்தி வீழ்ச்சி அடைந்து இருப்பதால் உப்பை இறக்குமதி செய்யும்படியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உப்பு நிறுவனங்கள் அரசிடம் நேரத்துடனே கோரிக்கை விடுத்திருந்தன என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் அரசு கடைசி நேரம் வரை இவ்விடயத்தில் அக்கறை காட்டாததினால் நாடு முழுவதிலும் உப்புக்குப் பற்றாக் குறை - தட்டுப்பாடு - பரவலாக ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் அரசாங்கம் இறக்குமதியில் அவசர - தீவிர - ஈடுபாட்டைக் காட்டியுள்ளது என்றும், முதற்கட்டமாக உப்பு பொதிகள் அடங்கிய கப்பல் ஒன்று இன்று நாட்டை வந்தடைய உள்ளது என்றும் இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட முன்னரே அதை இறக்குமதி செய்திருக்க வேண்டும். தவறியமையால் தான் தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இறக்குமதி செய்யப்படும் உப்பு விரைவில் சந்தைக்கு வரும் என்பதால் நிலைமை சீரடையும் என்று உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க கூறுகிறார்.

வழக்கமாக மார்ச் மாதம் உப்பு விளையும் காலமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இம்முறை அந்த விளைச்சல் காலம் முடிவடைகின்ற கட்டத்திலேயே நாட்டில் உப்புத் தட்டுப்பாடு பரவலாக வந்துவிட்டது. ஆகையினால் இந்த வருடம் உப்புஇறக்குமதிக்குஅதிகம்செலவிட வேண்டிய தேவை வரும் என எதிர்பார்க்கலாம்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை தாராளமாக உற்பத்தி செய்து, அடுத்த கட்டமாக ஏற்றுமதி வரை அதை கொண்டு போவதன் மூலம் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை சீரடையச் செய்ய முடியும். அந்நிய செலாவணியை ஈட்டி, நாட்டை நிதி நெருக்கடியில் இருந்து மீட்க முடியும்.

உப்பு உற்பத்தி போன்ற சிறிய விடயங்களை கூட, வசதியும் களச் சூழலும் இருந்தும் செய்ய முடியாத நாடு, உற்பத்தி பொருளாதாரத்தில் தன்னிறைவு கண்டு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி முன் நகரும் என்று எண்ணுவது வெறும் அபத்தக் கற்பனையாகத்தான் முடியும்.




# பிரம்மோஸ், ஆகாஷ் ஏவுகணைகளை விரைந்து விநியோகிக்க அறிவுறுத்தல்

பிரமோஸ், ஆகாஷ் போன்ற ஏவுகணைகள் மற்றும் ஏவுகணைகளின் பாகங்களை தயாரிக்கும் நிறுவனங்களிடம் விரைந்து விநியோகம் செய்ய மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியா பாகிஸ்தான் இடையேயான போரில் தரை வழி தாக்குதலை விட வான் வழி தாக்குதல்களான ஏவுகணை தாக்குதல் மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் தான் அதிகளவில் இருந்தது. பாகிஸ்தானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை அழிக்க இந்தியாவும் அதிகளவிலான வான் பாதுகாப்பு ஏவுகணைகளை பயன்படுத்தியது.

அதேபோல் பாகிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் ஸ்கால்ப், ஹேமர், ஸ்பைஸ் 2000 ஏவுகணைகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. அதேபோல் ட்ரோன்கள் மற்றும் வான் பாதுகாப்பு ட்ரோன்கள் ஆகியவையும் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன.

போரில் அதிகளவில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதால், ஆயுத கையிருப்பை மீண்டும் நிரப்ப ஏவுகணைகளையும், ட்ரோன்களை விரைந்து கொள்முதல் செய்ய அனைத்து இராணுவ கொமாண்டர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏவுகணைகள், ஏவுகணைகளின் பாகங்கள், ட்ரோன்களை தயாரிக்கும் டி.ஆர்.டி.ஓ, பாரத் டைனமிக்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், அதானி எல்பிட் அன்வான்ஸ்ட் சிஸ்டம், எம்.டி.ஏ.ஆர். டெக்னாலஜிஸ், அஸ்த்ரா மைக்ரோவே, ஆனந்த் டெக்னாலஜிஸ், ரகு வம்ஸி, ஜென் டெக்னாலஜிஸ், எஸ்.இ.சி இன்டஸ்ட்ரீஸ், உட்பட பல நிறுவனங்கள் ஐதராபாத்தில் உள்ளன. இந்த நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புகளை விரைந்து விநியோகம் செய்யும்படி மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

வழக்கமாக இராணுவ தளவாடங்களை விநியோகம் செய்ய 6 மாதங்கள் முதல் ஓராண்டு வரை ஆகும். ஆனால் தற்போது இவற்றை வாரந்தோறும் விநியோகம் செய்யும்படி ஏவுகணை மற்றும் ட்ரோன் தயாரிப்பு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வரும் காலங்களில் தரைவழி தாக்குதலைவிட வான்வழி தாக்குதல்கள் தான் அதிகளவில் இருக்கும் என்பதை தற்போதைய போர் உணர்த்தியுள்ளது. அதனால் வான் தாக்குதல் மற்றும் வான் பாதுகாப்புக்கு தேவையான ஆயுதங்களை விரைந்து கொள்முதல் செய்ய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

# இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கான உதவித் தொகையை வழங்குமாறு கோரிக்கை



இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கான உதவித் தொகையை தாமதமின்றி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களின் குடும்பத்திற்கு, தமிழக அரசின் உதவித் தொகையாக 350 இந்திய ரூபா மீனவளத் துறை மூலம் வழங்கப்படுகிறது. இந்த தொகை மீனவர்கள் சிறைக்குள் இருக்கும் நாள் களை மொத்தமாக கணக்கீடு செய்து நாள் ஒன்றுக்கு 350 இந்திய ரூபா வீதம் அந்தந்த பகுதி மீன்வளத் துறை அலுகம் மூலம் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

இது பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருந்து வருகிறது. இந்நிலையில் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் கடற்பகுதியில் இருந்து கடலுக்குச் சென்று இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்ட மீனவர்களுக்கான இந்த உதவித் தொகை வழங்குவதில் அதிகாரிகள் தாமதம் காட்டி வருகின்றனர் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வாரம் இலங்கை சிறையில் இருந்து விடுதலையான இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 25 பேர், 68 நாள்கள் சிறையில் இருந்து வெளியில் வந்தும் இந்த உதவித் தொகை வழங்கப்படவில்லை. தற்போது மீன் பிடி தடைக்காலம் அமுலில் உள்ளதால் தொழில் இன்றி அவர்கள் வாழ்வாதரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இனியும் தாமதம் இன்றி உதவித் தொகையை விரைந்து வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பாதுகாப்பு அதிகரிப்பு

பாகிஸ்தான் – இந்தியா போர் பதற்றம் சற்று தணிந்திருக்கும் நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் பாதுகாப்பை உள்துறை அமைச்சகம் அதிகரித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரது பாதுகாப்பில் சிறப்பு குண்டு துளைக்காத கார் சேர்க்கப்பட்டுள்ளது. டில்லியில் உள்ள அவரது வீட்டைச் சுற்றி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜெய்சங்கருக்கு ஏற்கெனவே மத்திய ரிசர்வ் பொலிஸ் படை கொமாண்டோக்களால் வழங்கப்படும் ணு-பிரிவு பாதுகாப்பு உள்ளது. 24 மணி நேரமும் அவரைப் பாதுகாக்க 33 கொமாண்டோக்கள் கொண்ட குழு நிறுத்தப்பட்டுள்ளது.




# அருணாச்சல பிரதேசத்தின் சில பகுதிகளின் பெயரை சீனா மாற்றியமைக்கு இந்தியா கடும் கண்டனம்

அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளின் பெயரை சீனா மாற்றியுள்ளமைக்கு, இந்தியா கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

பெயரை மாற்றினாலும் அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதை சீனாவால் மாற்ற முடியாது என்று இந்தியா குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அருணாச்சாலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருக்கிறது.

இதில் சீனாவின் முயற்சிகள் அனைத்தும் வீணானவை, அபத்தமானவை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளின் பெயரை மாற்ற சீனா முயற்சிக்கிறது.

இத்தகைய முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம் என ரன்தீர் ஜெய்ஸ்வால் அறிக்கையின் ஊடாக தெரிவித்துள்ளார்.



# சர்வதேச சமூகம் பாகிஸ்தானைத் தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும்: பலூசிஸ்தான் விடுதலை படை

சர்வதேச சமூகம் பாகிஸ்தானின் தீவிரவாத செயல்களைத் தொடர்ந்து பொறுத்துக்கொண்டால் அது முழு உலகின் அழிவுக்கும் வழிவகுக்கும் என்று பலூசிஸ்தான் விடுதலை படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு சர்வதேச அளவில் தொடர்ந்து சகிப்புத் தன்மை காட்டுவது தெற்காசியப் பிராந்தியத்தில் உறுதியற்ற தன்மையை உருவாக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

லஷ்கர்–இ–தொய்பா, ஜெய்ஷ்–இ–முகமது போன்ற அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாதக் குழுக்களின் எழுச்சிக்கு மையமாக பாகிஸ்தான் இருப்பதனால் சர்வதேச சமூகம் பாகிஸ்தானைத் தீவிரவாத நாடாக அறிவிக்குமாறு பலூசிஸ்தான் விடுதலை படை கூறியுள்ளது.

இந்தியாவும், சர்வதேச சமூகமும் பாகிஸ்தானுக்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் மேலும் ரத்தக்களரி ஏற்படும் எனவும் விடுதலை படை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பி.எல்.ஏ. செய்தித் தொடர்பாளர் ஜீயந்த் பலூச் மேலும் தெரிவிக்கையில்,

“பலூசிஸ்தான் விடுதலையை குறிக்கோளாக வைத்து மட்டுமே நாங்கள் செயல்பட்டு வருகிறோம். எந்தவொரு அதிகார மையம் அல்லது ஒரு நாட்டின் அழுத்தத்தின் கீழ் செயல்படவில்லை. சுதந்திரமாக ஆயுதம் ஏந்தி போராடி வருகிறோம்.

கடந்த வாரத்தில் மட்டும் பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தின் 51 இடங்களில் 71 ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தியுள்ளோம். பாகிஸ்தான் இராணுவம், உளவு மையங்கள் மட்டுமின்றி உள்ளூர் பொலிஸ் நிலையம், கனிம போக்குவரத்து வாகனங்கள், தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்புகளை உள்ளிட்டவற்றை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம்.

பி.எல்.ஏ. இயக்கத்தை பொறுத்தவரையில் அது பகடைக்காயோ அல்லது அமைதியான பார்வையாளரோ கிடையாது. அது ஒரு துடிப்பான தீர்க்கமான இயக்கம்.” என்றார்.

# உருகுவேயின் முன்னாள் ஜனாதிபதி ஜோசே பெபெ முஜிகா காலமானார்





உருகுவேயின் முன்னாள் ஜனாதிபதியும், உலகளவில் மிகவும் எளிய ஜனாதிபதி என அழைக்கப்பட்ட ஜோசே “பெபெ” முஜிகா தனது 89 ஆவது வயதில் காலமானார்.

முன்னாள் ஜனாதிபதியின் மறைவு தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி யமாண்டு ஓர்சி தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார்.

அதாவது, “நீங்கள் எமக்குத் தந்த அனைத்துக்கும் நன்றி உங்கள் மக்களுக்குக் காட்டிய பேரன்புக்கும் நன்றி” என தற்போதைய ஜனாதிபதி தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முஜிகாவுக்கு கடந்த ஆண்டு உணவுக்குழாய் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டிருந்தாலும், அவரது மரணத்தின் காரணம் இதுவரை அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

முஜிகாவின் ஆட்சிக் காலத்தில் உருகுவேயின் கல்வித்துறை முன்னேற்றம் குறைவாக இருந்ததாகவும், பொது செலவுகள் அதிகரித்ததாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

எனினும், ஊழல் குற்றச்சாட்டு எதுவும் ஜோசே “பெபெ” முஜிகா மீது இல்லை என்பதே குறிப்பிடத்தக்கது.




இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

21

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



ஜே.வி.பிக்கு எதிராக நடந்த பலவித வன்முறைகளும் கொலைகளும் 1988 இன் தொடக்கத்தில் இருந்து அவர்களை பாதிப்படையச் செய்யத் தொடங்கி, படையினரை அவர்களது கவனத்திற்கு கொண்டு வந்தது .21 ஏப்ரல் 1989இல் "இரத்தம் குடிப்பவர்களின் உறவினர்களுக்கு" என்ற பிரகடனத்தை 'தேசப்ரிய ஜனத்த வியாபாரய '(DJV) என்ற அவர்களது கட்டமைப்பு ஊடாக ஜே.வி.பி. வெளியிட்டது.

"தேசாபிமானிகளைப் படுகொலை செய்து, இரத்தம் குடிக்கும் படையினரதும் பொலிஸாரினதும் உறவினர்களே! இந்தப் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் அவற்றை உடனடியாக நிறுத்தாவிட்டால் தேசாபிமானிகள் ஆயுதப் படைகள், ஆயுதப் படையினருக்கும், பொலிஸாருக்கும் எதிராக மட்டுமல்ல, அவர்களின் உறவினர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பார்கள்" – என்று அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் அவர்களது பத்திரிகைகளின் தலையங்கங்களை இந்த வாதங்களில் வடித்தார்கள்:–

"இந்தியாவின் ஏகாதிபத்திய இராணுவமும் அவர்களது கையாள்களான ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் எங்கள் மக்களுக்கு எதிராகப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுவதைக் கண்டும் காணாத மாதிரி இருக்கும் நமது அரசு, இந்த மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் தேசாபிமானிகளை வாடகைக்கு எடுத்திருக்கும் குண்டர்களால் படுகொலை செய்கிறது. இது எப்படி நியாயமாகும்? யார் இந்த நிலையைப் பொறுத்துக் கொள்ள முடியும்? இதனைத் தடுப்பதற்கு நாங்கள் எவ்வளவோ முயற்சிகள் செய்தோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தங்களது படையணிக்குள் கொலைகாரர்கள், அதிரடிப்படை கொலையாளிகள், சில இரத்த வெறி பிடித்த பொலிஸ்காரரை பதவி உயர்வுகளும் சன்மானங்களும் கொடுத்து உள்வாங்கி உள்ளார்கள். இப்படியான கட்டங்களில் நாம் என்ன செய்ய முடியும்? நாங்கள் மேலும் எங்களது தேசாபிமானிகள் இந்த இரத்த வெறி பிடித்த அட்டைகளால் உறிஞ்சப்படுவதைப் பார்த்து இருந்து, எங்களது தேசம் அழிவதைப் பொறுத்திருக்கலாமா?

"படையினரின் பெரும்பான்மையினர் தங்களுக்கு அது ஒரு தொழிலாக சம்பளம் பெறுவதற்குத்தான் அதில் இணைந்துள்ளார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் கொலைகாரர்கள் அல்லர். ஆகவே அவர்களை வடக்கின் பிரிவினைவாதிகளைச் சுட்டுத் தள்ளுவது போல் சுட்டுத் தள்ளும் எண்ணம் எங்களுக்கு இல்லை." என்றும், நாங்கள் முன்னர் கொன்றவர்களை ஏன் கொன்றோம், அவர்கள் துரோகிகள் என உறுதிப்படுத்தி அதன் பின் தான் செய்தோம் என்ற விளக்கங்களும் கொடுத்தனர்.

மேலும் "படையினரே! கண் விழித்துப் பாருங்கள். தென்பகுதியில் இருக்கும் ஆயிரக்கணக்

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

கான தேசாபிமானிகளைக் கொன்று குவிக்கவென பல அயோக்கியர்கள் வலம் வரும் போது, வடக்கிலும் கிழக்கிலும் நடப்பவை என்ன? நேற்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இந்திய ஏகாதிபத்தியத்தின் படைகள், இன்று திருகோணமலையைக் கைப்பற்ற போகின்றார்கள். அடுத்த நாள் அது பொலனறுவை. அதன்பின் அநுராதபுரம். தொடர்ந்து மலையகம். பின் முழு நாடும் அவர்களின் கைகளுக்கு வந்து விடும்..... நீங்கள் இந்த நாட்டை – இந்த தேசத்தை – அபிமானம் வைத்துப் போற்றும் தேசாபிமானிகளைக் கொன்று குவித்து விட்டு இந்திய ஏகாதிபத்தியத்திடம் நாட்டைக் கையளிக்க போகின்றீர்களா?.... பிரேமதாசா – ரஞ்சன் விஜேரத்தின கூட்டம் படைகளில் உள்ள தேசாபிமானமிக்க போராளிகளை இந்திய இராணுவம் கொல்வதற்கு அனுமதித்து, மிஞ்சப் போகும் மற்றவர்களை – மக்களிடையே உள்ள தேசாபிமானிகளை – படுகொலை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளார்கள்..... இதற்காக அவர்களுக்கு நம்பிக்கையான படை வீரர்கள், எதிரானவர்கள் யார் என்பதை அடையாளப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அப்படி குறியிடப்பட்டவர்கள் அழியப் போகிறார்கள்" என்ற வாதங்களிலேயே பிரகடனங்களும் தலையங்கங்களும் இருந்தன. அவை ஜே.வி.பியினது சந்தர்ப்பவாத அங்கலாய்ப்புகளைக் காட்டின எனப் படைத்தளபதிகள் பார்த்து, கணித்து, தங்களது திட்டங்களை அதற்கு ஏற்ப அவர்கள் வகுத்தனர்.

நாட்டின் விடுதலையின் வீரர்கள் என்று வானளாவப் புகழ்ந்த படையினரை மட்டுமல்ல, அவர்களது குடும்பங்களையே அழிப்போம் என்று 1989இல் ஜே.வி.பி. பிரகடனம் தந்தது படையினர் எல்லோரையுமே கோபத்துக்குள்ளாக்கியது. ஜே.வி.பியினரும் கூட முன்னைய வெருட்டல்கள் போல்






இன்றி, இந்தப் பிரகடனத்தில் மிகவும் உறுதியாக இருந்தார்கள். இந்தப் பிரகடனங்களாலும், தங்களது குடும்பத்தினரை பணயம் வைத்து படைவீரர்கள் தங்களது பதவிகளை விட்டு வெளியேற வேண்டும் என ஜே.வி.பி. கண்டிமைப்படுத்தியமை தங்களது தன்மானங்களைப் பாதித்ததாக படையினர் உணர்ந்தார்கள். படைகளில் துடிப்பாக இருந்த 20 வீதத்தை பயமுறுத்தி பணிய வைக்கலாம் என்று எண்ணிய ஜே.வி.பி. கடைசியில் ஒரு பக்கமும் சாராதிருந்த 50 வீதத்தினரை அவர்களுக்கு ஆதரவற்ற நிலைக்குத் தள்ளி, மிகுதி இருந்த முப்பது வீதத்தைக் கூட அவர்களோடு இணக்கப்பாடு இல்லாமல் ஆக்கினார்கள்.

தாங்கள் எடுக்க இந்த விதமான முடிவு எவ்வளவு முட்டாள்தனமான சந்தர்ப்பவாதம் என்பது மிக விரைவில் அவர்களுக்குப் புரிந்தது. படையினர் அவர்களது பிரகடனத்தை எந்த விதத்தில் பார்ப்பார்கள் என்பதை கணிக்க தவறியமை அவர்களது கட்டுக்கோப்பற்ற நிலைகளையும் வெளிப்படுத்தியது. ஏனெனில் பின் நாள்களில் அவர்களது முக்கிய தலைவர்களான டி.எம்.ஆனந்தா, பியதாச ரணசிங்க என்ற இருவரும் தடுப்பு காவலில் இருந்து விசாரிக்கப்பட்ட போது, தங்கள் இருவரையும் தவிர, மற்றவர்கள் சேர்ந்துதான் இந்தப் பிரகடனத்திற்கான முடிவை எடுத்தார்கள் என வாக்குமூலம் கொடுத்தாலும், றோஹண விஜயவீர தான் அப்படியான தீர்மானத்துக்கு ஒத்துப் போகவில்லை என்று கூற, அது யாருடைய தீர்மானம் என வினவப்பட்ட போது விஜயவீர அது அரசியல் குழுவால் மேற்கொள்ளப்பட்டது என்றார். அதையே இன்னும் ஒரு தலைவரான கமநாயக்கவும் கூறினார். அதனை ஒத்துக் கொள்வதால் படையினிடமிருந்து என்ன நடந்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

திருக்கும் என அறிந்திருந்தார்கள். ஆனால் அந்தப் பிரகடனம் மேற்கொள்ளும் வரை அவர்கள் மிகவும் நம்பிக்கையில் இருந்து கொக்கரித்தது, இப்பொழுது இந்த நிலைகளுக்கு ஆளாக்கிய விசனமும் இருந்தது.

படையினரின் உறவுகளுக்கு எதிரான பிரகடனம் வெளிப்படுத்தப்பட்ட பின் புதிய போஸ்டர்கள் பழைய வற்றின் மேலே (முன்னைய நாள்களில் ஜே.வி.பி. போஸ்டர்களுக்கு மேல் வேறு எதுவும் ஒட்டவோ, அவற்றைக் கிழிக்கவோ எல்லோரும் பயந்தார்கள்) வேறு போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. "எங்களில் ஒருவர் என்ற நீங்கள் 12 பேர்" என 'தேசபிரேமை சிங்கள தருண பெரமுன' (Patriotic Sinhala Youth Front) என்ற விழிப்புணர்வு (Vigilante) குழுவினால் ஒட்டப்பட்டன.

இந்தப் போஸ்டர் கலாசாரங்கள், அவை சரளமாகவும் காத்திரமாகவும் பாவிக்கப்பட்டமையைப் பார்க்கும்போது இந்த நாளில் இந்தியா - பாகிஸ்தான் மோதலுக்குப்பின் போஸ்டர்களும் ஊடகப் பதிவுகளும் சிந்தூர் தாக்குதலில் கொடி கட்டிப் பறப்பதைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது. அதேபோல் 'சிந்தூர்' போஸ்டர்கள் கொழும்பையும் கலகலக்க வைத்தன.

சந்திரிகா பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில், அவருக்கும் காமினி திஸநாயக்காவுக்கும் எதிரான போஸ்டர்கள் பம்பலப்பிட்டிய பகுதிகளில் சரமாரியாக ஒட்டப்பட்டன. அதில் சந்திரிகாவின் நெற்றியில் குங்குமக் கலறில் (தமிழ்ப் பெண்கள் அணியும் குங்குமம் போல்) பொட்டு வைத்திருந்தார்கள். பொலிஸாருக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில், கைகளைப் பிசைய, இவை ஜே.வி.பியால் செய்யப்பட்டவை எனத்





தெரிந்ததால் அவற்றைக் கிழிப்பதற்கு யாரும் முன் வரவில்லை. ஆகவே பம்பலப்பிட்டிய பொலிஸாரையே அதை அப்புறப்படுத்துமாறு பணிக்கப்பட, அதனை அகற்றும் போது பலருடைய விரல் கிழிந்து இரத்தம் வடிந்தமைக்குக் காரணம் போஸ்டர் ஒட்டிய பசையுடன் சிறிய கண்ணாடி துகள்களையும் சேர்த்துப் பயன்படுத்தியமையால் அவை காயப்படுத்தன எனத் தெரிய வந்தது. அந்த நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டவர்கள் ஏன் அப்படிக் கஷ்டப்படுகிறீர்கள், அந்தப் படங்களுக்கு மேல் தார் பூசி அழித்து விடலாமே என்று புத்தி சொன்னபோது, "உங்களுக்குப் புரிந்தால்தானே, பின் பிரதமரின் படத்தின் மேல் தார் பூசியது என எங்களை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விடுவார்கள்" என்றார்களாம்.

இந்த விழிப்புணர்வு குழுவினால் 'ஒருவருக்கு 12 பேர்' என்ற போஸ்டரை தவிர, ஜே.வி.பியின் பிரகடனம் பற்றி தேசாபிமானிகளின் உறவினர்கள் என்று விழித்து, இந்த நாட்டினை பிரிவினைவாதிகளான விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கு உயிர்களைக் கொடுத்துப் படையினர் போராடும் போது, இவர்களோ எமது மக்களிடையே எங்களது மக்களைக் கொல்கிறார்கள், இவர்கள் எப்படி தேசாபிமானிகளாக முடியும் என்று கேள்வி எழுப்புவது போன்ற துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இப்படியான அடுக்குகளின் பின் ஆகஸ்ட் 1989 ஜே.வி.பிக்கு எதிரான பாரிய, பயங்கர கொலைகள் நடந்தேற்றப்பட்டு, ஒரு நாளில் சராசரி 20 - 25 சடலங்கள் பாதையோரங்களில் கிடந்தன அல்லது ஆறுகள், நீர்நிலைகளில் மிதந்தன. கண்டி, குண்டசாலை மெனிக்கன்ன போன்ற இடங்கள் ஜே.வி.பிக்கு ஆதரவுத் தளமாக பார்க்கப்பட்டமையால் அங்கு ஈவிரக்கம் இன்றி 'உக்குஸா' என்ற விழிப்புணர்வு படையால் பலர் - சில வேளைகளில் குடும்பங்கள் முழுவதுமே - அழிக்கப்பட்டன.

ஒக்டோபர் 89 இல் ஜே.வி.பியினரால் பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் படை அதிகாரி, கலாசாலை உப அதிபர் மேலும் தொண்டர்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

படையில் பணியில் இருந்தவரும் கொல்லப்பட, இதற்குப் பழிக்குப் பழியாக அடுத்த நாள் 18 பேருடைய தலைகள் பல்கலைக்கழக நீர் தடாகத்தின் பக்கத்தில் பலவித கோணங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அவர்களின் தலையற்ற சடலங்கள் பல்கலைக்கழகத்தின் பல இடங்களில் பார்க்கக் கூடிய விதத்தில் பல கோணங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதுபோல் நாட்டின் பல பாகங்களிலும் இப்படியான படுகொலைகள் நடந்தேறி அவை மக்களுக்கு உள்ளூறப் பயம் தந்தன.






அரசாங்கம் 72 மணித்தியால நடவடிக்கை நிறுத்தத்தை அறிவித்து ஜே.வி.பியைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தாலும் அவை நிராகரிக்கப்பட்டன. மீண்டும் அழைக்கப்பட்ட போதும் ‘எங்களுக்கு இந்த நாடகங்கள் புரியும். எந்த ஒரு கட்டத்திலும் நாங்கள் இப்படியான கொலையாளிகள் எப்பொழுதாவது சமாதானத்தையோ, நட்பையோ விரும்புவார்கள் என்று நினைக்கவோ, நம்பி ஏமாறாகவோ தயாராகவில்லை’என்ற பதில்கள் தரப்பட்டன.

ஆனாலும் கதை முடிகிறது என எண்ணிய பெருவாரி ஜே.விபியின் அங்கத்தினரும் ஆதரவாளர்களும் சரணடையத் தொடங்கினர். அங்கிருந்து சரணடைந்தவர்களின் தகவல்களில் முக்கிய தலைவர்களுக்கான வேட்டைகள் தொடர்ந்தன.

குமுதினி படுகொலைகளின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழ் மக்களால் உறவுகளின் ஆத்ம சாந்திக்காக நடைபெறுகிறது. அதேபோல் தமிழ் பகுதிகளெங்கும் தமிழினம் பட்ட அழிவுகளின் துயரங்களை நினைவு கூர்ந்து இறந்த – காணாமல் போன – உறவுகளுக்காக முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்படுகிறது. இரு இனத்தவர்களுக்கும் எதிராக நடத்தப்பட்ட இவ்வித படுகொலைகளைப் பார்த்தால் இது ஜே.வி.பி. இடதுசாரி தத்துவத்தின் விளைவா என்றும், படைகளுக்கு ஊட்டப்பட்ட தமிழின விரோதமா என்றும் எண்ணலாம். ஆனால் அப்படி இல்லாமல் இவை சிங்கள மக்களின் மனோபாவங்களில் அவர்களிடையே வலுவாக ஊன்றிய ஒரு பண்பு. பிழைகள் ஒன்று தங்களுக்கு எதிராக நடந்து விட்டது என்ற உணர்வுகள் ஏற்பட்டால் ‘தான்டுவன’ (Donduwana) என்ற பௌத்த அடிப்படையில் அது உடனடியாக எவ்வளவு கொடூரமானாலும் பிரதி பரிகாரம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உள்ளுணர்வுதான் இவற்றிற்குக் காரணம்.

**(தொடரும்)**

# பிரி.,கனடா, ஐ.நா., இந்திய தூதர்களுடன் தமிழ்த் தேசியப் பேரவை சந்தித்துப் பேச்சு





வடக்கில் தமிழர்களின் நில இருப்பை உறுதிபடுத்த சர்வதேச சமூகத்தின் அவசர தலையீட்டைக்கோரி தமிழ்த் தேசியப் பேரவையினருக்கும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கள் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது .

தமிழ் தேசிய பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ ஐங்கரநேசன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் இந்தச் சந்திப்புகளில் கலந்து கொண்டனர்.

சந்திப்புகளைதொடர்ந்துதமிழ்தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பின்வருமாறு தனது கருத்தினை பதிவு செய்தார்:-

இன்று தமிழ் தேசிய பேரவையின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் கொழும்பில் உள்ள தூதரகங்களைச் சந்தித்து விசேடமாக மூன்று அவசர விடயங்கள் தொடர்பில் பேசியிருந்தோம்.

முதலாவதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக்கை சந்தித்தோம். தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவர் கலாநிதி பாண்டேயுடன் சந்திப்பு இடம்பெற்றது. மூன்றாவதாக ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதி மகான்ரே பிறஞ்சேயுடன் இடம்பெற்றது. தொடர்ந்து பிற்பகல் 3.00 மணிக்கு கனேடிய உயர்ஸ்தானிகருடன் அவரது இல்லத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் பொழுது கடந்த 2025 மார்ச் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் வவுனியா தவிரந்த நான்கு மாவடங்களில் சுமார் 6,000 ஏக்கர் நிலத்தை அரச காணியாக சுவீகரிக்கும் அரசின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நாம் எமது ஆட்சேபனைகளைர் தெரிவித்தோம். மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து உரித்தை உறுதிபடுத்த வேண்டும் என்ற அந்த நிலைப் பாட்டை அரசு மீள பெறவேண்டும் என வலியுறுத்தினோம்.

வடகிழக்கு மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்வுகள் காரணமாகவும் போர் அழிவுகள் காரணமாகவும் பெருமளவு மக்களின் சொந்தக் காணி ஆவணங்கள், சொத்துக்கள் இழக்க வேண்டி ஏற்பட்டது.

அத்துடன் சுனாமி மூலம் எமது மக்கள் சொத்துக்கள், ஆவணங்களை இழந்தார்கள். ஆகவே ஆவணங்களை உறதிபடுத்துவது சாத்தியமற்ற விடயம்.

போர் காரணமாக தமிழீழ மக்களின் சனத்தொகை பரம்பல் புலம்பெயர்ந்துள்ளது.

இந்தியாவில் ஒரு லடசத்திற்கும் மேற்பட்ட எமது ஈழ தமிழர்கள் இந்திய பிரஜைகளாக அங்கீகாரமின்றி வாழுகின்றனர். அவர்கள் அங்கு அங்கீகரிக்கப்படபோவதுமில்லை. இவ்வாறான நிலையில் அந்த மக்கள் தங்களுடைய தாய் நாட்டிற்கு வருகை தரவேண்டிய சூழல் ஏற்பட்டால் அவர்கள் இங்கே வாழ முடியாத சூழல் உருவாகும். இந்தியாவிற்கு மிகப்பெரிய பங்கு உள்ளது என்ற அடிப்படையில் இந்திய தூதுவரையும் சந்தித்தோம்.

இந்த மக்கள் அரசின் பயங்கரவாத அச்சுறுத்தல் மூலமே நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

இந்நிலையில் அரசு இந்த வர்த்தமானியை வெளியிட்டதன் நோக்கம் மக்களின் காணி பிரச்சினைகளைத் தீர்ப்பதல்ல. மாறாக மக்களின் ஆவணங்களற்ற காணிகளை அரச காணிகளாக சுவீகரிப்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு உரித்துக்கள் வழங்கவேண்டும் என்பதில் மாற்றுகருத்திற்கு இடமில்லை. இந்த வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விடயத்தினை முற்று முழுதாக ஏற்றுகொள்ள முடியாது. எனவே இந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படல் வேண்டும்.

அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவது விடயம் குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான 79 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மேலதிகமாக 325 ஏக்கர் காணியை விகாரைக்குரிய புத்த பிக்கு கோரியிருந்தார். ஆனால் அக்காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானவையல்ல என்ற அடிப்படையிலும் அப்பகுதியில் பெருமளவு விவசாயிகளது விவசாய நடவடிக்கைகளை கருத்திற்கொண்டும் அது மறுக்கப்பட்டிருந்தது. எனினும் பிக்குவும் தொல்பொருள் திணைக்களத்தினரும் பொலிஸாரது ஒத்துழைப்புடன் சொந்தக் காணியில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இருவரையும் கைதுசெய்து உழவு இயந்திரத்தையும் நீதிமன்றில் நிறுத்தி, நீதிமன்றின் மூலம் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் .

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த 325 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்கவேண்டுமென மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கூறியிருந்தார். அவ்வாறு ஜனாதிபதி முன்னிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்வு எட்டப்பட்ட பின்னரும் அத்தீர்மானத்தையும் மீறி இன்றும் கூட அந்த வளாகத்தில் உள்ள குளத்தில் மீன்பிடித் தடையும் விதிக்கப்பட்டுள்ளதோடு விவசாயத்திற்கும் அந்த நீரைப் பயன்படுத்தத் தடையையும் விதித்து விவசாயமும் செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்விடயத்தில் தலையிட்டு ஜனாதிபதி ரணில் இணங்கியவாறு குறித்த 325 ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் திணைக்களம் விடுவிக்கவும் பிக்குவின் அடாவடியை கட்டுப்படுத்தவும் சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

மூன்றாவது விடயமாக தையிட்டி சட்டவிரோதமான விகாரை தொடர்பில் பேசியிருந்தோம். சட்டவிரோதமான விகாரை என்று தெரிந்தும் இன்னமும் அந்த காணிகளின் உரிமையாளர்களிடம் வழங்காது அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றன. தையிட்டி விகாரை சட்டவிரோதமானது, தொல்பொருளுடன் தொடர்பற்றது. சட்டவிரோதமாக கட்டப்பட்டது. அகற்றபட்டே ஆகவேண்டும். காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஆகவே இலங்கையின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கரிசனை செலுத்தும் மைய நாடுகளாக பிரித்தானியா மற்றும் கனடா என்பன இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபைக்கு இது தொடர்பில் பங்கு இருப்பதால்ஐ.நாவின்இலங்கைக்கானவதிவிடப் பிரதிநிதியிடமும் இவ்விடயத்தில் அவரது தலையீட்டை வலியுறுத்தியுள்ளோம் - என்றார்.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காரைதீவில் நேற்று அனுஷ்டிப்பு!

(பாறுக் ஷிஹான்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி கஞ்சி வழங்கல் வழமை போல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் நேற்று காரைதீவு பொதுச் சந்தைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன் போது இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

முன்னதாக துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன . பலரும் உரையாற்றினர். நிறைவாக அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். இதேபோல் இவ் வாரம் முழுவதும் இந்த மாவட்டத்தில் சகல பாகங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் அழிவை மறக்க முடியாது, முள்ளிவாய்க்கால் வாரமாக இனப்படுகொலையின் நினைவு தினத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு தொடர்ச்சியாக இடம்பெறும் என காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இதே வேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று காரைதீவில் அனுஷ்டித்த வேளை பொலிஸாரும் அங்கு வருகை தந்திருந்தனர்.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் காரைதீவுக்கான தலைவர், செயலாளர், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இவ் வேளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வப்பிரகாஷ் அவர்கள் உணர்வு பூர்வமான உரை மூலம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தினார்.











# சிவில் சமூக செயற்பாட்டாளர் வழி மறித்துத் தாக்கப்பட்டார்!

## குடும்பிமலைப் பிரதேசத்தில் நேற்றுச் சம்பவம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் பகுதியைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் செல்வகுமார் வழி மறிக்கப்பட்டு இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்றொ புதன்கிழமை காலை குடும்பிமலைப் பிரதேசத்தில் வைத்து வழி மறித்த நால்வர் அருகில் இருந்த பற்றைக் காட்டிற்குள் இவரை இழுத்துச் சென்று, கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் மிக மோசமான முறையில் சரமாரியாகக் கையாலும், தடியாலும் தாக்கியுள்ளனர்.

நேற்றைய தினம் குடும்பிமலைப் பிரதேசத்தில் வைத்து முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்குவதற்கு ஏற்பாடாகியிருந்த நிலையில் ஏற்பாட்டாளர்களில் ஒருவருடைய தாயார் காலமானதன் காரணத்தினால் அந்த நிகழ்வை நடாத்த முடியாமல் போனது.

இக்காரணத்தை குடும்பிமலைக் கிராமத்திற்குச் சென்று உரிய தரப்பினரிடம் தெரிவித்து விட்டு வருவதற்காகத் தனது மோட்டார் சைக்கிளில் அவர் சென்றுள்ளார்.

செல்லும் வழியில் தரவை இராணுவ முகாமிற்கும் ஐந்தாம் கட்டை சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கும் இடையில் அவர் வழிமறிக்கப்பட்டார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் அரைகுறைத் தமிழில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் தொடர்பான கேள்விகளைக் கேட்டுத் தாக்கியுள்ளனர். சட்டைகள் கிழிக்கப்பட்டு, உள் பனியனால் கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்டு மிக மோசமாக அவர் தாக்கப்ப ட்டுள்ளார்.

இத்தாக்குதல்தாரிகள் அவ்விடத்தை விட்டுச் சென்றதும், அந்த வழியால் வந்த சிலரால் காப்பாற்றப்பட்டு தற்சமயம் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பட்டியல் உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை வழங்கக் கோருகின்றது தேர்தல் ஆணைக்குழு

( வி.ரி.சகாதேவராஜா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியல் உறுப்பினர்களை பெயரிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஏழு நாள்களுக்குள் இந்த பட்டியல் உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சை குழுக்களின் தலைவர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் உறுப்பினர்களை பெயரிடும் போது பெண் உறுப்பினர்கள் தெரிவு தொடர்பில் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியல் உறுப்பினர்களின் பெயர்கள் கிடைக்கப் பெற்றதும், ஏற்கனவே தேர்தலில் வட்டாரங்களில் வெற்றியீட்டிய வேட்பாளர்களின் பெயர்களுடன் இணைத்து வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தருக்கு 15 அடி உயரத்தில் கற்சிலை திறப்பு விழா

## கல்லடிப் பாலத்திற்கு அருகாமையில் நாளை மறுதினம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

முத்தமிழ் வித்தகரும், உலகில் முதலாவது தமிழ் பேராசிரியருமான சுவாமி விபலானந்தருக்கு 15 அடி உயரமான கற்சிலை இம்மாதம் 17ஆம் திகதி – நாளை மறுதினம் – பிற்பகல் 4.30 மணிக்கு, மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட உள்ளது என சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழாச் சபையின் தலைவர் க. பாஸ்கரன் தெரிவித்தார்

இது தொடர்பான ஊடகவியலாளர் மகாநாடு நேற்றுக் காலையில் மட்டக்களப்பு ஈஸ்ட் லக்கூன் ஹோட்டலில் நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் மகரயாழை ஆய்வு செய்து அதற்கு உருவம் கொடுத்து உலகிற்கு தந்தவர்.அவரால் மகரயாழ் இன்றும் உயிர் வாழ்கிறது.

அது மட்டும் இன்றி உலகில் முதலாவது தமிழ் பேராசிரியராக பதவி பெற்று தமிழ் மொழிக்கும் அதன் இனத்திற்கும் நன்கு சேவையாற்றியவர். குறிப்பாக தமிழர்களின் மத்தியில் இருக்கின்ற குல பேதங்களை அறவே ஒழிக்க பாடுபட்டவர். இதற்கு மேலாக ஆன்மீகத்தில் துறவியாகி ஆன்மீக ஞானத்தை வழங்குவதில் அவர் காட்டிய உற்சாகம், வழிவகைகள் அளப்பெரியன. இப்படியான ஒரு மகான் வாழ்நாளில் மறக்க முடியாதவர். அவரின் ஞாபகார்த்தமாக 15 அடி உயரமான கற்சிலையை கல்லடி பாலத்திற்கு அருகாமையில் திறந்து வைப்பதில் விபுலானந்தரின் நூற்றாண்டு விழா சபை மிகவும் சந்தோசம் அடைகிறது. – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் சிலை நிர்மாணக் குழு தலைவர் தேசபந்து முத்துக்குமார் செல்வராசா, சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் பொதுச் செயலாளர் ச.ஜெயராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வனத் திணைக்களம் எல்லைக் கற்கள் போடும் நடவடிக்கை நிறுத்தம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வனத் திணைக்களம் தனது எல்லைகளை வரையறை செய்யும் வேலைத் திட்டத்தை கடந்த மாதம் ஆரம்பித்த போது மாவட்ட விவசாயிகள் மற்றும் வன ஜீவிகள் திணைக்களம் ஆகியோருக்கிடையில் முரண்பாட்டு நிலையொன்று தோற்றம் பெற்றிருந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் சுமுகமான தீர்வுக்குச் செல்லும் வரை வன எல்லை நிர்ணயத்தை நிறுத்தும்படி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பிரதி அமைச்ச அருண்ஹேமசந்திரா கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக வேலைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டிருந்தன.



எனினும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் ஒரு சில இடங்களில்வனத்திணைக்களம்வேலைகளை ஆரம்பிக்க முயற்சி செய்வதாக விவசாயிகள் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் மறு அறிவித்தல் வரும் வரை வன எல்லை நிர்ணய வேலைகள் அனைத்தையும் நிறுத்தி வைக்கும்படி மாவட்ட அரசாங்க அதிபருக்கு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா நேற்று புதன்கிழமை கடிதம் மூலம் பணித்துள்ளார். எல்லைக் கற்கள் போடும் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தச் செய்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.05.2025




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.05.2025




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரணையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்பப் பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்துகொள்ள இயலாது.



# வென்னப்புவ கடலில் மூழ்கி உயிரிழந்த நான்கு இளைஞர்களும் சடலங்களாக மீட்பு

வென்னப்புவ பகுதியில் உள்ள கடலில் மூழ்கி உயிரிழந்த நான்கு இளைஞர்களும் சடலங்களாக மீடகப்பட்டுள்ளனர் என்று வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நான்கு இளைஞர்களும் ஒன்றாக இணைந்து கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது கடலலையில் அள்ளுண்டு சென்றனர். அதனைத் தொடர்ந்து வென்னப்புவ பொலிஸார், கடற்படையினரின் உதவியோடு நால்வரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலங்களாக மீட்கப்பட்ட மூவர் நுவரெலியா, பொகவந்தலாவ – சென் விஜயன்ஸ் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றுமொரு நபர் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உதயகுமார் ஸ்ரீதரன் (வயது 17), ஸ்ரீகாந்த் சரண் ராஜ் (வயது 19), ஸ்ரீகாந்த் அஜித் குமார் (வயது 18) மற்றும் யூசுப் (வயது 27) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் ஸ்ரீகாந்த் சரண் ராஜ் மற்றும் ஸ்ரீகாந்த் அஜித் குமார் ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் என்றும், உதயகுமார் ஸ்ரீதரன் உறவினர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.